# தூய லூர்து அன்னை ஆலயம்


50, ஓபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| பங்குத்தந்தை: அருட்திரு மைக்கேல் சீத்தாராம்<br>*frmichaelsitaram@gmail.com* | உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு பவுல் இயோ<br>*fryeopaul@gmail.com* |
| உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு தே. நித்திய சகாயராஜ்<br>*nithiya@catholic.org.sg* | பங்கு அலுவலகம்: *ololsec@gmail.com*<br>*ololpastoral@gmail.com* |


| | | |
|---|---|---|
| 18 மார்ச் 2018 | **தவக்காலம் ஐந்தாம் ஞாயிறு** | இரண்டாம் ஆண்டு |




அன்புமிக்கச் சகோதர சகோதரிகளே! நீங்கள் இருப்பது இறைவனின் இல்லம். எனவே, உங்கள் கைத் தொலைபேசியை அமைதி நிலையில் வைக்கும்படியும், ஆலயத்தின் உள்ளே உணவு உண்பதையும், பானங்கள் அருந்துவதையும் தவிர்க்கும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி.

# உங்கள் சிந்தனைக்கு

அன்பார்ந்த இறைமக்களே!

தவக்காலத்தின் இந்த இறுதி ஞாயிறன்று வசந்த காலத்தை நமக்கு நினைவுறுத்தும் அழகான ஒரு கூற்றை இறைமகன் இயேசு நமக்கு முன் வைக்கிறார். கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியா விட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். தாவர உலகம் மீண்டும் உயிர்பெற்று எழும் வசந்தக் காலத்தில் இயேசுவின் இந்தக் கூற்று பல எண்ணங்களை உள்ளத்தில் விதைக்கின்றது. விதைக்கப்பட்ட இந்த எண்ணங்கள் மிகுந்த விளைச்சலைக் கொடுக்க வேண்டும் என்பது நம் எண்ணம், நம் வேண்டுதல்.

இதுவரை தன் நேரம் இன்னும் வரவில்லை என்று உணர்ந்திருந்த இயேசு, இன்று தன் நேரம் வந்துவிட்டது என்று சொல்கிறார். எதற்கான நேரம் இது? மானிட மகன் மாட்சி பெறும் நேரம். உணவாக மாறி மற்றவரை வாழ்விப்பதும், விதையாக மாறி தன் இனத்தைப் பெருக்குவதும் கோதுமை மணிக்கு மட்டுமல்ல, உலகில் படைக்கப்பட்ட அனைத்து தானிய மணிகளுக்கும் உள்ள இயல்பான இரண்டு காரணங்கள். இயேசுவும் தான் மரித்து மண்ணில் புதைக்கப்பட்டு மீண்டும் உயிர்த்தெழுந்து இந்த மானிடம் மீட்பு பெற வேண்டும் என்று விரும்பியதால் தான் நேரம் வந்துவிட்டது என்று கூறுகிறார்.

நாமும் இயேசு என்னும் நிலத்தில் புதைக்கப்பட்டு மீண்டும் புத்துயிர் பெற்று பலன் தரும் கோதுமை மணியாக மாறிட நேரம் விந்து விட்டது என்று இயேசு அழைப்பது நாம் காதுகளிலும் ஒலிக்கின்றது அல்லவா? கோதுமை மணி தன் சுய உருவை, உயிரை இழந்தது போல் நாமும் சுயநலம் இழந்து பிறருக்கு பலன் தரும் மானிடராக இவ்வுலகில் வலம் வர தந்தையாம் இறைவனிடம் இறைஞ்சுவோம். வாழ்த்துக்கள்.

# புனித வார நிகழ்வுகள்

## குருத்து ஞாயிறு

ஆங்கிலத் திருப்பலி:

**24-03-2018** (சனி) மாலை 6:00 & 7:30 மணி

**25-03-2018** (ஞாயிறு) காலை 7:30, 11:30 & மதியம் 1:00 மணி

தமிழ் திருப்பலி:

**25-03-2018** (ஞாயிறு) காலை 9:00 & மாலை 6:00 மணி

குருத்தோலை ஆசீரும், பவனியும், தொடர்ந்து தமிழில் திருப்பலியும் நடைபெறும்.

## பெரிய வியாழன்: **(29-03-2018)**

இரவு 8 மணிக்கு இருமொழித் திருப்பலி (ஆங்கிலமும் தமிழும்) நடைபெறும்.

மதியம் 12:30 மற்றும் மாலை 6:30 மணி திருப்பலிகள் நடைபெறாது.

## பெரிய வெள்ளி: **(30-03-2018)**

மதியம் 2:30 மணிக்கு ஆங்கிலத்தில் சிலுவைப்பாதையும், தொடர்ந்து திருவழிபாடும் நடைபெறும்.

மாலை 6:00 மணிக்குத் தமிழில் திருவழிபாடும், தொடர்ந்து சிலுவைப்பாதையும் நடைபெறும்.

## பாஸ்கா திருவிழிப்பு: **(31-03-2018)**

இரவு 8:00 மணிக்கு ஆங்கிலத்தில் சடங்குகளும், தொடர்ந்து திருப்பலியும் நடைபெறும்.

இரவு 11:30 மணிக்குத் தமிழில் திருப்பலி நடைபெறும்.

## உயிர்ப்பு ஞாயிறு: **(01-04-2018)**

ஆங்கிலத் திருப்பலிகள்: காலை 7:30, 11:30 & மதியம் 1:00 மணி

தமிழ்த் திருப்பலிகள்: காலை 9:30 & மாலை 6:30 மணி

## GIFT திட்டத்திற்கான இரண்டாவது காணிக்கை

இன்றையத் திருப்பலிகளில் எடுக்கப்படும் இரண்டாம் காணிக்கை நமது உயர்மறைமாவட்டத்தின் GIFT (நம்பிக்கையுடனும் நன்றியுணர்வோடும் கொடுத்தல்) திட்டத்திற்காக வழங்கப்படும். அதற்கான உங்கள் பங்களிப்புகளைக் காணிக்கைப் பைகளில் போடும்படி அன்புடன் வேண்டுகிறோம். இக்காணிக்கையானது நமது உயர்மறைமாவட்டத்தில் செயல்படும் பல்வேறு அமைப்புகளுக்காகவும் கட்டிடத் திட்டங்களுக்காகவும் பயன்படுத்தப்படும். தாராள மனதுடன் கொடுக்கும் உங்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

## இடைவிடா சகாய அன்னை நவநாள்

சனிக்கிழமைகளில் இரவு 8:30 மணிக்கு தமிழில் இடைவிடா சகாய அன்னை நவநாளும், தொடர்ந்து திவ்விய நற்கருணை ஆசீரும் நடைபெறும். அன்னையின் பரிந்துரையில் இறையருள் பெற அனைவரும் வருக.

## ஆலயத் துப்புரவு மற்றும் தூய்மைப் பணி

நாள்: 18-03-2018, ஞாயிறு மதியம் 2:30 மணி

ஆலயத் துப்புரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு நமது ஆலயம் மதியம் 2:30 முதல் 4:00 மணி வரை மூடப்பட்டிருக்கும். நம் ஆலயத்தைத் தூய்மைப்படுத்தத் தன்னார்வலர்களை அன்புடன் அழைக்கிறோம்.

## தமிழ் மறைக்கல்வி வகுப்புகள்

வெகு விரைவில் தமிழில் மறைக்கல்வி வகுப்புகள் ஆரம்பமாகவிருக்கிறது.

ஞாயிறு காலை 9:30 மணித் தமிழ் திருப்பலி முடிந்தவுடன் சுமார் 45 நிமிடங்களுக்கு மறைக்கல்வி வகுப்புகள் நடைபெறும். நம் பிள்ளைகளுக்கு நன்கு புரியும் வண்ணம் தினசரி செபங்களும், திருப்பலி செபங்களும், பாடங்களும், தமிழில் விளக்கிச் சொல்லித்தரப்பட்டு, புதுநன்மை மற்றும் உறுதிப்பூசுதல் பெற அவர்கள் தயார் செய்யப்படுவர். எங்களது இப்புதிய முயற்சியை இந்தியத் தமிழ் கத்தோலிக்கப் பெற்றொர்கள் அனைவருக்கும் தெரியப்படுத்தி ஆதரவளிக்க உங்களை அன்புடன் வேண்டுகிறோம். நன்றி.

## விவிலியக் குறுக்கெழுத்து

கீழுள்ள வசனங்கள் இன்றைய வாசகங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. கோடிட்ட இடங்களுக்கான பதில்கள் இங்குள்ள கட்டங்களுக்குள் மறைந்து கிடக்கின்றன. அவை மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ, இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ, குறுக்காகவோ இருக்கலாம். இது சிறுவர்களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களும் முயற்சி செய்யலாம். கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் மீண்டும் ஒரு முறை வாசகங்களைப் படித்து முயற்சி செய்யவும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| த | க | க் | ர | இ | வு | த | தி | ல் | து |
| டு | லை | ய | செ | ச் | தீ | க | ளை | ள | தை |
| ட் | த | வ | தி | ட | வா | ஓ | ள் | கா | தொ |
| ர் | டி | டு | ன் | ப் | லை | று | கை | பி | ண் |
| தோ | ப | ழ | அ | ப் | ற் | வே | க் | சா | ட |
| ய | ப் | ளை | நி | மு | ந | ஞா | பி | த் | ரு |
| தூ | ழ் | வே | க | ன | மை | து | கோ | த | ம் |
| கோ | கீ | க் | தா | ங் | வா | யா | ந | வு | டி |
| க் | ல | ய | ல | ள | வ | ழ் | ன் | த | வி |
| க | ரி | மோ | ஒ | ளி | யி | பா | ம் | ய் | ஓ |

1. அவர்களது __________ நான் மன்னித்து விடுவேன்.
2. அவர்களுடைய __________ இனி மேல் நினைவு கூரமாட்டேன்.
3. கடவுளே! __________ உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும்.
4. துன்பங்கள் வழியே __________க் கற்றுக் கொண்டார்.
5. நான் இருக்கும் இடத்தில் என் __________ இருப்பர்.
6. __________ மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும்.
7. இப்போது என் உள்ளம் __________. நான் என்ன சொல்வேன்?
8. இவ்வுலகின் __________ வெளியே துரத்தப்படுவான்.

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| முதலாம் வாசகம்: | எரேமியா 31 : 31 – 34 |
| பதிலுரைப்பாடல்: | திருப்பாடல் 51 : 1-2, 10-11, 12-13 |
| பதிலுரை: கடவுளே! தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும். | |
| இரண்டாம் வாசகம்: | எபிரேயர் 5 : 7 – 9 |
| நற்செய்தி வாழ்த்தொலி: 'எனக்குத் தொண்டு செய்வோர் என்னைப் பின்பற்றட்டும். நான் இருக்கும் இடத்தில் என் தொண்டரும் இருப்பர்,' என்கிறார் ஆண்டவர். | |
| நற்செய்தி வாசகம்: | யோவான் 12 : 20 – 33 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| முதல் வெள்ளி (ஆங்கிலம்) : | மாலை 7:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை (ஆங்கிலம்) : | காலை 9:00 மணி |
| பொது விடுமுறை (தமிழ்) : | காலை 10:00 மணி |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 6:30 மணி<br>தொடர்ந்து திருப்பலி 7:30 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:00 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

தூய லூர்து அன்னை சமூகக் கூடக் கட்டுமானத் திட்டமானது மறுபரிசீலனை செய்யப்படுகிறது. எனவே, மறு அறிவிப்பு வரும் வரை அதற்கான நிதி திரட்டும் முயற்சிகளை உயர்மறைமாவட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படிக் கேட்டுக்கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் இல்லத்திலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு.